# மீன் அமினோ அமிலம் (Fish Amino)

### தேவையான பொருட்கள்:

| | | |
|---|---|---|
| மீன் | - | 1 கிலோ |
| நாட்டு வெல்லம் | - | 1 கிலோ |
| பப்பாளி பால் | - | 5 மில்லி |

சந்தைகளில் உள்ள கழிவு மீன்கள், உண்ண உபயோகத்திற்குப் பயன்படாத கழிவுமீன்கள் ஆகியவற்றை சேகரிக்க வேண்டும்.

### செய்முறை:

மீனையும், நாட்டு வெல்லத்தையும் ஒரு பிளாஸ்டிக் பாத்திரத்தில் போட்டு தண்ணீர் விடாமல் நன்குக் கலக்கவும். பின்பு அதை இறுக்கமாக மூடி வைக்க வேண்டும். 20 - 25 நாட்கள் மூடி வைக்க வேண்டும். இது நன்றாக நொதித்து பழுப்பு நிறத்தில் மாறி விடும். மீன் வாடை முழுமையாக போய் விடும்.









**பயன்படுத்தும் முறை:**



ஒரு லிட்டர் தண்ணீருக்கு இருபது மில்லி மீன் அமிலம் என்ற அளவில் கலந்து பயிர்களுக்கு தெளிக்கலாம் அல்லது நீர் பாய்ச்சும் போது அதில் கலந்தும் செடிகளுக்கு விடலாம். மீன் அமினோ அமிலம் தழைச்சத்தை இயற்கையான முறையில் தயாரித்து வழங்குகிறது. ஜப்பான், கொரியா போன்ற நாடுகளில் பரவலாக, இயற்கை விவசாயம் மேற்கொள்பவர்கள் இந்த முறையை பயன்படுத்துகிறார்கள். இது தழைச்சத்து மிக்க வளர்ச்சி ஊக்கி ஆகும்.



**கவனம்:**

இது மிகுந்த தீவிர தன்மை கொண்ட திரவம் ஆகும். இதனை மிகவும் நீர்க்க வைத்தே பயன்படுத்த வேண்டும்.



**பயன்கள்:**

இது தழைச்சத்து கொண்டது என்பதால் பூக்கள் வருவதற்கு முன்னால் மட்டுமே பயிர்களில் பயன்படுத்த வேண்டும். மண் வளத்தை அதிகரிக்க மண்ணை தயார்படுத்தும் போதும் பயன்படுத்தலாம்.


*மேலும் விபரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி:*

**விவேகானந்த கேந்திரம் - நார்டெப்**

**(இயற்கைவள அபிவிருத்தித் திட்டம்)**

**கன்னியாகுமரி - 629 702.**

Ph: 04652 - 246296

Email: vknardep@gmail.com www. vknardep.org